செ.வெ.எண்:42 நாள்:22.01.2018

திருநெல்வேலியில் தொழுநோய் ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

----

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் தேசிய தொழுநோய் விழிப்புணர்வு தினம் விழிப்புணர்வு நிகழ்சிகள் நடத்துதல் தொடர்பான ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (22.01.2018) நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் மகாத்மாகாந்தி அவர்களின் நினைவு தினமான 30.01.2018 அன்று வ.உ.சி மைதானத்தில் தொழுநோய் விழிப்புணர்வு உறுதி மொழி ஏற்ப்பு (Sparsh Leprosy Awareness Campaign) நிகழ்ச்சி சிறப்பாக நடத்திட வேண்டும். மேலும் 08.02.2018 அன்று சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்திட ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் தலைமையாசிரியர்கள் கூட்டத்தில் பயிற்சியளிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சிவந்த அல்லது வெளிறிய 1 அல்லது அதற்கும் மேற்பட்ட தேமல்கள் உணர்ச்சியற்று வறண்டு வலியற்று இருத்தல். எண்ணெய் தடவியது போன்று மினு மினுப்பு தோல், முகம் மற்றும் கண் இமைகளில் முடியில்லாது இருத்தல், காது, காதுக்கு பின்னாலும் சிறு, சிறு முடிச்சு (nodules) போன்ற கட்டிகள் இருத்தல். கை, கால்களில் சந்தை குறைந்து வறண்ட உணர்ச்சியற்ற நிலை போன்ற அறிகுறிகளை பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். கூட்டு மருந்து சிகிச்சையில் மூலம் தொழுநோயினை முற்றிலும் குணப்படுத்த முடியும் என்பதையும், தொழுநோயளிகளை அரவணைத்து அவர்களை இயல்பான வாழ உதவிட வேண்டும். என்ற விழிப்புணர்வை ஏற்படுத்திடும் வகையில் தேசிய தொழுநோய் தினம் மற்றும் சிறப்பு கிராமசபை கூட்டம் நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திட வேண்டும் என பேசினார்.

இக்கூட்டத்தில் துணை இயக்குநர் (காசநோய்) மரு.கார்குழளி, துணை இயக்குநர் (குடும்ப நலம்) மரு.வசந்தகுமார், முதன்மை கல்வி அலுவலர் திருமதி.முரகானந்தம், மாவட்ட விரிவாக்க கல்வி அலுவலர் திரு.அப்துல்காதர், நல கல்வியாளர் திரு.அருள்ராஜ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.